# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# நீதி நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021 - 2022

### மானியக் கோரிக்கை எண். 3

**எஸ். ரகுபதி**
சட்டத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2021

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு | 1–2 |
| 3. | உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் அதன் மதுரை கிளை | 2–4 |
| 4. | செலவினங்களின் வகைப்பாடு | 4–5 |
| 5. | நீதிமன்றங்களின் எண்ணிக்கை | 5 |
| 6. | உரிமையியல் நீதிமன்றங்கள் | 6–11 |
| 7. | குற்றவியல் நீதிமன்றங்கள் | 11–13 |
| 8. | சிறப்பு நீதிமன்றங்கள் | 13–26 |
| 9. | தமிழ் வழியிலான சட்ட இதழ் | 26–27 |
| 10. | நிலுவையிலுள்ள வழக்குகளின் விவரம் | 27 |
| 11. | ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம் | 27–28 |
| 12. | நீதிமன்ற மேலாளர்கள் | 29 |
| 13. | நீதித்துறை அமைப்புகளை கணினிமயமாக்கும் திட்டம் | 29–32 |
| 14. | உரிமையியல் நீதிபதிகள் நியமனம் | 32 |

| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 15. | நீதித்துறை பயிற்சிக் கழகம் | 33 |
| 16. | உயர்நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ்மொழியை பயன்படுத்துதல் | 33–34 |
| 17. | நீதித்துறை முத்திரைத்தாள் மின்னணுமயமாக்கல் | 34–35 |
| 18. | தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி | 35 |
| 19. | இளம் வழக்குரைஞர் உதவித் தொகை | 36 |
| 20. | தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி | 36 |
| 21. | நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் | 37 |
| 22. | தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு | 38–47 |
| 23. | அரசு வழக்காடும் துறை, உயர்நீதிமன்றம், சென்னை | 48 |
| 24. | குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் | 48–49 |
| 25. | முடிவுரை | 50 |
| 26. | பிற்சேர்க்கை 1 முதல் 7 வரை | 51–65 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை
# நீதி நிருவாகம்
# மானியக் கோரிக்கை எண். 3
# கொள்கை விளக்கக் குறிப்பு 2021 – 2022

## முன்னுரை

அனைத்து குடிமக்களுக்கும் விரைவான நீதி கிடைக்கப் பெற வேண்டும் என்பது நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முதன்மையான குறிக்கோள்களில் ஒன்றாகும். இதனை அடைவதற்கு, நீதிமன்றங்களுக்குத் தேவையான அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளான கட்டட வசதி, மனித ஆற்றல் மற்றும் நீதித்துறையினை கணினிமயமாக்கல் போன்றவற்றை வழங்குவதற்கு இந்த அரசு முன்னுரிமை கொடுத்து வருகிறது.

## 2. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு

நமது நாட்டின் முதன்மை நீதிமன்றமாக புதுதில்லியிலுள்ள இந்திய உச்சநீதிமன்றம் உள்ளது.

மாநிலங்களிலுள்ள அனைத்து உயர்நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன. மாநிலத்திலுள்ள நீதித்துறையின் படிநிலை அமைப்பு பிற்சேர்க்கை 1–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 3. உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் அதன் மதுரை கிளை

3.1 மாநிலத்தின் உயரிய நீதி அமைப்பு சென்னை உயர்நீதிமன்றம் ஆகும். உயர்நீதிமன்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 75. அவற்றுள், 61 நீதிபதிகளை கொண்டு தற்போது செயல்பட்டு வருகிறது. தற்பொழுது, சென்னை உயர்நீதிமன்றத்தில் 45 நீதிபதிகளை கொண்டும் மற்றும் அதன் மதுரை கிளையின் 16 நீதிபதிகளைக் கொண்டும் இயங்கி வருகிறது. உயர்நீதிமன்றம், உரிமையியல் வழக்குகளின் அசல் மனுக்களையும் மற்றும் சிறப்பு அசல் மனுக்களையும் (நீதிப்பேராணை)

விசாரிக்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளது. இந்நீதிமன்றம், உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் மேல்முறையீட்டினை விசாரணை செய்யும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது. உரிமையியல் தொடர்பான அசல் வழக்குகளை பொறுத்தமட்டில் சென்னை மாநகரத்துக்குள் எழும் ரூ.1.00 கோடிக்கு அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரிக்கிறது. சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் அதிகார எல்லையானது மதுரை, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கரூர், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தேனி ஆகிய 13 மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். அசல் வழக்குகளின் அதிகார வரம்பினைத் தவிர, சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் பெற்றுள்ள அனைத்து அதிகாரங்களையும் இந்நீதிமன்றம் கொண்டுள்ளது.

3.2. சென்னை உயர்நீதிமன்ற அதிகார எல்லைக்குள் புதுச்சேரி யூனியன் பகுதி நீதிமன்றங்களும் அடங்கும். புதுச்சேரி யூனியன் பகுதி தொடர்பான பணிகளைக் கவனிக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் குறித்த செலவினம் முதற்கண் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை புதுச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது. '

3.3. நீதிபரிபாலனம் செய்வதுடன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பகுதி உள்ளிட்ட அனைத்து சார்நிலை நீதிமன்றங்களின் முழு நிருவாகப் பொறுப்பையும் சென்னை உயர்நீதிமன்றம் மேற்கொள்கிறது.

**4. செலவினங்களின் வகைப்பாடு**

சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரை கிளை ஆகியவை குறித்த செலவினங்கள், "சாட்டிய செலவினம்" எனவும்,

நீதி நிருவாகம் குறித்த பிற செலவினங்கள் "அனுமதிக்கப்பட்ட செலவினம்" எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**5. நீதிமன்றங்களின் எண்ணிக்கை**

தற்போது, இம்மாநிலத்தில் சிறப்பு நீதிமன்றங்களையும் சேர்த்து மொத்தம் 1280 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுள், சென்னை மாநகரில் 144 நீதிமன்றங்களும், இதர மாவட்டங்களில் 1136 நீதிமன்றங்களும் இயங்கிவருகின்றன. சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை விவரம் மற்றும் இதர மாவட்டங்களில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் முறையே பிற்சேர்க்கை–2 மற்றும் 3–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 6. உரிமையியல் நீதிமன்றங்கள்

### 6.1. மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை

மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பானது சென்னை மாநகர் எல்லை முழுவதையும் கொண்டுள்ளது. சென்னை அமர்வு பிரிவிற்கு, இந்நீதிமன்றமே அமர்வு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. வழக்கின் பண மதிப்பினை பொறுத்தமட்டில், உதவி நீதிபதி ரூ.10.00 இலட்சம் வரையிலும், முதன்மை நீதிபதி ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் ரூ.1.00 கோடிக்கு மிகாமலும் விசாரிக்கும் அதிகார வரம்பினைப் பெற்றுள்ளனர். .

### 6.2. சிறு வழக்கு நீதிமன்றங்கள், சென்னை

1882–ஆம் ஆண்டின் மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் வரும் சிறு வழக்குகளை விசாரிக்க சிறு வழக்கு நீதிமன்றங்கள் அதிகாரங்களை பெற்றுள்ளன. 1988–ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம்

தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் பிரத்யேக தீர்ப்பாயங்களாகவும் ஐந்தாவது மற்றும் ஆறாவது சிறு வழக்கு நீதிமன்றங்களாகவும் செயல்படுகின்றன. தலைமை நீதிபதி மற்றும் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது நீதிமன்றங்களின் நீதிபதிகள், மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். பத்து முதல் பதினாறு வரையுள்ள நீதிமன்றங்களின் நீதிபதிகள், சென்னை மாநகரத்திற்கான வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர். மேலும், தலைமை நீதிபதி மற்றும் ஏழு, எட்டு மற்றும் ஒன்பதாவது நீதிமன்றங்களின் நீதிபதிகள் வாடகை கட்டுப்பாடு தொடர்பான மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர்.

## 6.3. மாவட்ட நீதிமன்றங்கள் / கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள்

மாநிலத்தில் 91 மாவட்ட நீதிமன்றங்கள் (ஏற்கனவே விரைவு நீதிமன்றங்களாக இருந்த 49 கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள்) 31 மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. மாநில தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், 1948, எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், 1948 மற்றும் மோட்டார் வாகனச் சட்டம், 1988 போன்ற சில குறிப்பிட்ட தனிச் சட்டங்கள் தொடர்பான சிறப்புத் தீர்ப்பாயங்களாகவும் மாவட்ட நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மாவட்ட நீதிபதிகள் அவரவர் பகுதிகளுக்கான அமர்வு நீதிமன்ற நீதிபதிகளாகவும் உள்ளனர். இவர்கள் தத்தம் பகுதியில் எழக்கூடிய உரிமையியல் மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர். மேலும், தத்தம் ஆளுகைக்குட்பட்ட சார்நிலை நீதிமன்றங்களையும் ஆய்வு செய்கின்றனர். வழக்கின் பண மதிப்பை பொறுத்தமட்டில் ரூ.10.00

இலட்சம் மற்றும் அதற்கு மேல் உச்சவரம்பற்ற வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தினை மாவட்ட நீதிபதிகள் பெற்றுள்ளனர்.

### 6.4. சார்பு நீதிமன்றங்கள்

சார்பு நீதிமன்றங்கள் முதுநிலை உரிமையியல் நீதிபதிகளின் தலைமையின் கீழ் இயங்குகிறது. சார்பு நீதிமன்றங்கள் ரூ.1.00 இலட்சத்திற்கு மேலும், ஆனால் ரூ.10.00 இலட்சத்திற்கு மிகாமலும் பணமதிப்பு கொண்ட அனைத்து உரிமையியல் வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளன. மேலும், தத்தம் எல்லைக்குட்பட்ட மாவட்ட உரிமையியல் நீதிமன்ற முடிவிற்கெதிராக தொடரப்படும் ரூ.1.00 இலட்சம் வரையிலான மதிப்புக்குட்பட்ட மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் இந்நீதிமன்றங்கள் பெற்றுள்ளன. மேலும், இந்நீதிமன்றங்கள், உதவி அமர்வு நீதிமன்றங்களாகவும் மற்றும் மோட்டார்

வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன.

## 6.5. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்

உரிமையியல் நீதிபதிகளின் தலைமையின் கீழ் இயங்கும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ரூ.1.00 இலட்சம் வரையிலான பண மதிப்புடைய வழக்குகளை விசாரித்து வருகின்றன. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் அவற்றிற்கென்று வரையறுக்கப்பட்ட அதிகார எல்லையை கொண்டுள்ளன. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ரூ.20,000/– வரையிலான சிறு வழக்குகளையும் விசாரித்து வருகின்றன. இந்நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் வரம்புக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயலாற்றுகின்றனர்.

## 6.6. மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

மாநிலத்தில் உள்ள சில பகுதிகளில் உள்ள வழக்கு தொடுக்கும் பொதுமக்கள் தங்களது பகுதிகளில் உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாததால் தங்களது பகுதிக்கு அப்பாற்பட்ட வேறு பகுதிகளில் உள்ள உரிமையியல் நீதிமன்றங்களில் தங்களது உரிமையியல் வழக்கு தொடர்பாக தீர்வுகாண்பதில் மிகுந்த இன்னலுக்கு ஆளாகிறார்கள். இவற்றினை களையும் பொருட்டு இந்நீதிமன்றங்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கின்றன.

## 7. குற்றவியல் நீதிமன்றங்கள்

7.1. பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் சென்னை மாநகரில் தத்தம் அதிகார வரம்புக்குட்பட்டு குறிப்பிட்ட காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வழக்குகளை விசாரிக்கின்றன. சென்னையில் உள்ள

37 பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் 2 மாவட்ட நீதிபதிகள் தரத்திலும், 27 முதுநிலை உரிமையியல் நீதிபதி தரத்திலும் மற்றும் 8 உரிமையியல் நீதிபதி தரத்திலும் தற்போது இயங்கிவருகின்றன.

## 7. 2. தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

மாநிலத்தில் 32 தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் நிருவாக கட்டுப்பாட்டில் அந்தந்த மாவட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்குகின்றன. சில வகையான வழக்குகளில், உதவி அமர்வு நீதிபதிக்குரிய அதிகாரங்கள் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்தந்த மாவட்ட தலைமை குற்றவியல் நடுவர் தங்கள் மாவட்டத்தில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆய்வினை மேற்கொள்வார்.

## 7. 3. குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

இந்த நீதிமன்றங்கள் ஏறக்குறைய இம்மாநிலத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் இயங்கி வருகின்றன. இந்நடுவர் நீதிமன்றத்தில், மூன்றாண்டிற்கு மேற்படாத சிறைத் தண்டனையோ அல்லது ரூ.10,000/–ற்கு மிகையில்லாத அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கக்கூடிய குற்ற வழக்குகள் மட்டுமே விசாரிக்கப்படுகின்றன.

## 8. சிறப்பு நீதிமன்றங்கள்

8.1. தொழிலாளர் நல நீதிமன்றங்கள் தொழிலாளர் தொடர்பான சர்ச்சைகள் மற்றும் இழப்பீட்டு கோரிக்கை மனுக்களை விசாரித்து தீர்ப்பு அளிக்கின்றன. இம்மாநிலத்தில், 17 தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் ஒரு தொழில் வழக்கு தீர்ப்பாயம் செயல்பட்டு வருகின்றன. மேலும், தொழிலாளர் நல நீதிமன்றங்கள், அரசு அனுப்பி வைக்கும் தொழிலாளர் குறித்த சர்ச்சைகளையும்,

பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்களையும் விசாரித்து தீர்ப்பு வழங்குகின்றன.

8.2. மாவட்ட நீதிபதி பதவி நிலையில் நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955–ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க செயல்படுகின்றன. அவையாவன:–

1. கூடுதல் அமர்வு நீதிமன்றம்–I, திருச்சிராப்பள்ளி
2. கூடுதல் அமர்வு நீதிமன்றம்–I, தஞ்சாவூர்
3. கூடுதல் அமர்வு நீதிமன்றம்–II, திருநெல்வேலி
4. கூடுதல் அமர்வு நீதிமன்றம்–III, மதுரை

மேலும், பதிமூன்று சிறப்பு நீதிமன்றங்கள் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989–ன் கீழ் பதிவு

செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென கீழ்க்காணும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன:–

1. விழுப்புரம்
2. சிவகங்கை
3. திண்டுக்கல்
4. இராமநாதபுரம்
5. ஸ்ரீவில்லிப்புத்தூர் (விருதுநகர் மாவட்டம்)
6. புதுக்கோட்டை
7. கடலூர்
8. நாமக்கல்
9. தேனி
10. திருவண்ணாமலை
11. பெரம்பலூர்
12. தூத்துக்குடி
13. வேலூர்

இதர மாவட்டங்களில் அந்தந்த மாவட்டத்திலுள்ள முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்களுக்கு மேற்குறிப்பிட்ட சட்டங்களின் கீழ் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளின் மீது விசாரணை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

8.3. சென்னையில் இரு சிறப்பு நீதிமன்றங்களும், மதுரையில் ஒரு சிறப்பு நீதிமன்றமும் மொத்தம் மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் மையச் சட்டங்களை மீறுவதனால் பதிவு செய்யப்படும் பொருளாதார குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கின்றன.

8.4. திருமணம் மற்றும் குடும்ப விவகாரங்கள் தொடர்பான வழக்குகளில் இணக்கத்தை மேம்படுத்தவும் மற்றும் அவ்வழக்குகளை விரைந்து முடிக்கவும் குடும்ப நல நீதிமன்றங்கள் சட்டம், 1984–ன் கீழ் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் 31 குடும்ப நல நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

மேலும், சென்னையில் 7 கூடுதல் குடும்ப நல நீதிமன்றங்களும், கோயம்புத்தூரில் ஒரு கூடுதல் குடும்ப நல நீதிமன்றமும், மாவட்ட நீதிபதி தரத்தில் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, சென்னையில் 4 விடுமுறை கால நீதிமன்றங்களும் செயல்பட்டு வருகின்றன.

8.5. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் தமிழ்நாடு வைப்பீட்டுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997–ன் கீழ் பதிவு செய்யப்படும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு செயல்பட்டு வருகின்றன.

8.6. சென்னையில் ஆறு சிறப்பு நீதிமன்றங்களும், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒன்று வீதம் மொத்தம் எட்டு சிறப்பு நீதிமன்றங்கள் மத்திய குற்றப் புலனாய்வுத் துறையினால் பதிவு செய்யப்படும் வழக்குகளை

பிரத்யேகமாக விசாரிப்பதற்கென இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் நிதி முறைகேடு வழக்குகளை விசாரணை செய்வதற்கு சென்னையில் இயங்கிவரும் ஒரு சிறப்பு நீதிமன்றமும் அடங்கும்.

8.7. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் எட்டு சிறப்பு நீதிமன்றங்கள் ஊழல் தடுப்புச் சட்டம், 1988 (மையச் சட்டம் 49/1988)–ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென செயல்பட்டு வருகின்றன.

8.8. சென்னை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தலா இரண்டு வீதம் நான்கு சிறப்பு நீதிமன்றங்களும் மற்றும் விழுப்புரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றமும் போதை மருந்துகள் மற்றும் மன மயக்க

பொருட்கள் சட்டம், 1985–ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்காக செயல்படுகின்றன.

8.9. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி பதவி நிலையில் மொத்தம் ஆறு சிறப்பு நீதிமன்றங்கள் அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955–ன் கீழ் பதிவாகும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிக்க செயல்பட்டு வருகின்றன.

8.10. திருப்பத்தூரில் சந்தனக்கட்டை தொடர்பான குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

8.11. ஒன்பது இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய

மாவட்டங்களிலும், எழும்பூர் மற்றும் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையங்களிலும் இந்திய இரயில்வே சட்டம், 1989–ன் கீழ் இழைக்கப்படும் குற்றங்களை விசாரணை செய்வதற்கு செயல்பட்டு வருகின்றன.

8.12. சென்னையில் இரண்டும், காஞ்சிபுரம், விழுப்புரம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, நாமக்கல், சேலம், ஈரோடு, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம், 12 நடமாடும் நீதிமன்றங்கள் மோட்டார் வாகனச் சட்டம், 1988 (மையச் சட்டம் 59/1988)–ன் கீழ் பதிவு செய்யப்படும் சிறு குற்றங்கள் மற்றும் ஏனைய சட்டங்கள் தொடர்பான சிறு வழக்குகளை விசாரிப்பதற்கு இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

8.13. சென்னையில் 2 தனி நீதிமன்றங்கள் பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள்

(தடுப்பு) சட்டம், 1987 (தற்போது நீக்கப்பட்டது)–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு செயல்பட்டு வருகின்றன.

8.14. சென்னை மற்றும் கோயம்புத்தூரில் குண்டு வெடிப்பு வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்வதற்காக இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை பூவிருந்தவல்லியில் செயல்படும் இந்நீதிமன்றம் பொடா சட்டம், 2002 (மையச் சட்டம் 15/2002)–ன் கீழ் வரும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளையும் விசாரணை செய்கிறது.

8.15. மதுரையில் ஓர் அமர்வு நீதிமன்றம் தென்மாவட்ட இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு செயல்பட்டு வருகிறது.

8.16. சென்னையில் இரண்டு சிறப்பு நீதிமன்றங்களும் மற்றும் ஒரு கூடுதல் சிறப்பு நீதிமன்றமும், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள்

மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கென செயல்பட்டு வருகின்றன. இதுதவிர, மாவட்டத்தில் உள்ள குற்றவியல் நடுவர்களுக்கும், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

8.17. சென்னையில் போலி முத்திரைத்தாள் மற்றும் கள்ள நோட்டு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

8.18. சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் பரிசுச் சீட்டு மற்றும் பணச்சுழற்சி திட்ட (தடைச்) சட்டம், 1978–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை (CBCID) குற்ற வழக்கு எண் 3876/2009–ஐ விசாரிப்பதற்கென செயல்பட்டு வருகிறது.

8.19. இம்மாநிலத்தில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென 32 மகளிர் நீதிமன்றங்கள் மற்றும் 29 கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

8.20. சென்னை, கோயம்புத்தூர், கடலூர், செங்கல்பட்டு (காஞ்சிபுரம் மாவட்டம்), நாகர்கோவில் (கன்னியாகுமரி மாவட்டம்), மதுரை, நாகப்பட்டினம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருநெல்வேலி, திருவண்ணாமலை, தூத்துக்குடி, வேலூர், விழுப்புரம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் (விருதுநகர் மாவட்டம்) ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் 16 சிறப்பு நீதிமன்றங்கள் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012–ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென இயங்கி வருகின்றன. மேலும் திண்டுக்கல், தர்மபுரி, தேனி மற்றும் திருவள்ளூர்

ஆகிய 4 நான்கு மாவட்டங்களில் நீதிமன்றங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

8.21. சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் மத்திய குற்றப்பிரிவால் பதிவு செய்யப்படும் மோசடி வழக்குகள் மற்றும் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் (CBCID) துறையின் சென்னை மாநகர வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்டு உள்ளது.

8.22. இம்மாநிலத்தில், 51 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென விரைவு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

8.23. இம்மாநிலத்தில், மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு மற்றும் நிலம் கையகப்படுத்துதல் போன்ற அசல் மனுக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென 36 சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் மோட்டார் வாகன

விபத்து இழப்பீடு அசல் மனுக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென கூடுதலாக 8 நீதிமன்றங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

8.24. சென்னையில் இரு சிறப்பு நீதிமன்றங்கள் உட்பட 26 சிறப்பு நீதிமன்றங்கள் நில அபகரிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கென, ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இதன் விவரம் பிற்சேர்க்கை 4–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

8.25. இம்மாநிலத்தில் 10 கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள், நான்கு நீதிமன்றங்கள் சென்னை உயர்நீதிமன்றத்திலும், நான்கு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்திலும் மற்றும் இரண்டு சென்னை சிறு வழக்கு நீதிமன்றத்திலும் உள்ளன. வழக்காடும் நபர்களை அழைப்பாணை மூலம் நீதிமன்றத்தில் முன்னிலை செய்யும் நடைமுறை மற்றும் வழக்கின் சாட்சியங்களை மட்டும் பதிவு

செய்யும் பணி நிறைவடையும் வரையில் விசாரணை செய்வதற்காக இந்நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

8.26.அறக்கட்டளைகளின் சொத்துக்களுக்கும் மற்றும் உரிய வயதடையாதவர்கள் மற்றும் காலஞ் சென்றவர்களின் சொத்துக்களுக்கும் பொறுப்பு வகிப்பதற்காக சென்னையில் மாவட்ட நீதிபதி பதவி நிலையில், அரசு தலைமை சொத்தாட்சியர்–பொறுப்பு சொத்தாட்சியர் இருக்கின்றார். இவருக்கு உதவியாக உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் துணைத் தலைமை சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார்.

## 9. தமிழ் வழியிலான சட்ட இதழ்

வழக்குரைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்படுகின்ற சிறப்பான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புகளை வெளிக்கொணரும் வகையில்,

'தீர்ப்பு திரட்டு' என்ற பெயரில் தமிழ் வழியிலான சட்ட இதழ், மாதமிருமுறை வெளியிடப்பட்டு வருகிறது.

## 10. நிலுவையிலுள்ள வழக்குகளின் விவரம்

சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம், மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்றக் கிளை மற்றும் மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் 2016–ஆம் ஆண்டு முதல் 2020–ஆம் ஆண்டு வரை தொடுக்கப்பட்டுள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், முடிவடைந்த மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த விவரம் முறையே பிற்சேர்க்கை–5, 6 மற்றும் 7–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 11. ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்

நீதிமன்றங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, நீதிமன்றங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை

மேம்படுத்துவதற்கான "ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தினை ஒன்றிய அரசின் நீதித்துறையானது, மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நிதி உதவி அளித்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் சார்நிலை நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளை கட்டுவதன் மூலம் விரைந்து நீதி வழங்குவதற்கு வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்தளிக்கப்படும் நிதி உதவி 2015–2016–ஆம் ஆண்டு முதல் 60:40 என்ற விகிதாச்சாரத்தில் மாற்றி அமைக்கப்பட்டு உள்ளது. ஒன்றிய அரசு 2021–2022 ஆம் நிதியாண்டிற்கு தமது பங்களிப்பு தொகை தோராயமாக ரூ.35.66 கோடியினை ஒதுக்கியுள்ளது.

## 12. நீதிமன்ற மேலாளர்கள்

35 நீதிமன்ற மேலாளர் பணியிடங்கள் சென்னை உயர்நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் மாவட்ட நீதிமன்றங்களுக்கு 13–வது நிதிக்குழுவின் பிரிவுகளின் கீழ் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. உயர்நீதிமன்றத்தின் வேண்டுகோளிற்கிணங்க, 35 மேலாளர் பணியிடங்கள் மற்றும் 23 உதவிப் பணியாளர் பணியிடங்கள் ஆகியவற்றிற்கு மாநில நிதியிலிருந்து பணி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## 13. நீதித்துறை அமைப்புகளை கணினிமயமாக்கும் திட்டம்

13.1. நாட்டில் உள்ள உயர்நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட / சார்நிலை நீதிமன்றங்களை கணினிமயமாக்கும் திட்டங்களில் ஒருங்கிணைந்த கணினிமயமாக்கும் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டம், மடிக்கணினிகள், லேசர் அச்சுப்பொறிகள், நீதிபதிகள்

மற்றும் நீதிமன்ற அலுவலர்களுக்கான பயிற்சி, நீதிபதிகளுக்கான இணையதள வசதிகள், நீதிமன்ற வளாகங்களுக்கான இணையதள இணைப்புகள், காணொலி ஒளிக்காட்சி கலந்துரையாடல் வசதி, இடம் தேர்வு, வன்பொருள், இணைய கட்டமைப்பு மற்றும் மென்பொருள் பயன்பாடு, தொழில்நுட்ப மனிதவளம், தகவல் தொழில் நுட்ப மற்றும் தொலை தொடர்புகளை தரம் உயர்த்துதல் ஆகிய முக்கிய அம்சங்களை கொண்டதாகும். இத்திட்டத்தின் குறிக்கோள்களாவன:–

- ❖ நீதிமன்றங்களில் தினந்தோறும் நடைபெறும் நீதிமன்ற நிருவாகத்தினை சிறப்பாக முறைப்படுத்த உதவுதல்.

- ❖ நிலுவையிலுள்ள வழக்குகளை குறைக்கும் பொருட்டு நீதிமன்ற நிருவாகத்திற்கு உதவுதல்.

- ❖ வழக்கு தொடுப்பவர்களுக்கு வெளிப்படையான தகவல் அளித்தல்.

- ❖ நீதிபதிகளுக்கு சட்டம் மற்றும் நீதித்துறை சார்ந்த தகவல்களை பெற வழிவகை செய்தல்.

**நீதித்துறையினை கணினிமயமாக்கல்**

13.2. நீதிமன்ற வழக்குகளின் தற்போதைய நிலை, ஆணைகள் மற்றும் தீர்ப்புகள் பற்றிய தகவல்களை வழக்கு தொடுப்பவர்கள் மற்றும் வழக்குரைஞர்கள் ஆகியோர் பெறுவதற்கு உயர்நீதிமன்ற வலைதளம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

13.3. குடிமக்கள் சார்ந்த சேவையாக HCMDRS (hcmad.auth, courts–madurai.sms, courts–tn.sms) என்ற அனுப்புனர் குறியீடு மூலமாக சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை மற்றும் சார்நிலை நீதிமன்றங்களின் பதிவு செய்யப்பட்ட செல்லிடப்பேசி பயனாளிகளுக்கு வழக்கு விவரப்பட்டியல் மற்றும் வழக்கு தொடர்பான தகவல்கள் குறுந்தகவலாக அனுப்பப்பட்டு வருகின்றன.

13.4. சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளையின் பல்வேறு இடங்களில் தொடுதிரைகள் பொருத்தப்பட்டு உள்ளன.

13.5. 42 மாவட்ட நீதிமன்ற வளாகங்களுக்கு லீஸ்டு லைன் இணைப்பு மற்றும் அனைத்து நீதித்துறை அலுவலர்களுக்கும் தனியான அடையாள எண் கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களுக்கும் தொழில்நுட்ப பணியாளர்கள் வழங்கப்பட்டுள்ளது.

**14. உரிமையியல் நீதிபதிகள் நியமனம்**

2018–2020–ஆம் ஆண்டிற்கான 176 உரிமையியல் நீதிபதி பணியிடங்களை நிரப்புவதற்கான எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முக தேர்வு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் மேற்கொள்ளப்பட்டு அதில் 58 நபர்கள் தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இது குறித்த தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 15. நீதித்துறை பயிற்சிக் கழகம்

நீதிபதிகள் மற்றும் நீதித்துறை பணியாளர்களுக்கு திறன்மிகு பயிற்சியளிப்பது மற்றும் புதியதாக பணி நியமனம் செய்யப்படும் நீதிபதிகளின் பணித்திறனை வளர்த்துக் கொள்ள ஏதுவாக அறிமுகப் பயிற்சி வழங்குவது போன்றவை இப்பயிற்சி கழகத்தின் முக்கிய நோக்கமாகும். சென்னையில் உள்ள தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகம் மற்றும் மதுரை, கோயம்புத்தூரில் உள்ள பயிற்சிக் கழக மண்டல மையங்கள் ஆகியவை சென்னை உயர்நீதிமன்றத்தின் நிருவாக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

## 16. உயர்நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ் மொழியை பயன்படுத்துதல்

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் மொழியை அலுவல் மொழியாக பயன்படுத்த

வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கை 11.10.2012 அன்று நடந்த உச்சநீதிமன்ற முழு நீதிமன்ற கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும், இது இம்மாநிலத்தின் நீண்ட நாள் கோரிக்கை மற்றும் விருப்பமாக இருப்பதால், இக்கோரிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு ஒன்றிய அரசிடம் மீண்டும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

**17. நீதித்துறை முத்திரைத்தாள் மின்னணுமயமாக்கல்**

நீதிசார்ந்த மின்னணு முத்திரைத்தாள் முறையானது முதற்கட்டமாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை கிளையிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது அனைத்து முதன்மை மாவட்ட நீதிமன்றங்களிலும் விரிவுபடுத்தப்படவுள்ளது. நீதிசார்ந்த மின்னணு முத்திரையை பொதுமக்கள் தாங்களாகவே இணையம் மூலம் உருவாக்கி பயன்படுத்தலாம். இத்திட்டத்தை செயல்படுத்த, திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங்

கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்கள் நீதிசாரா மின்னணு முத்திரைத் தாள்களையும் விற்பனை செய்வதற்கு திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு அரசு அனுமதியளிக்கப்பட்டு உள்ளது.

## 18. தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி

பணியில் இருக்கும்போது மரணமடையும் வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்கள் / நியமனதாரர்கள் ஆகியோருக்கு தற்பொழுது ரூ.7.00 இலட்சமாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிக்கு ஆண்டுதோறும் ரூ.8.00 கோடி மானியம் வழங்கப்படுகிறது.

## 19. இளம் வழக்குரைஞர் உதவித் தொகை

புதியதாக பதிவு செய்யப்பட்ட இளம் வழக்குரைஞர்களுக்கு மாதம் தோறும் ரூ.3,000/- இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பிட்ட தகுதிகளின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

## 20. தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி

பணியில் இருக்கும்போது மரணமடையும் வழக்குரைஞர்களின் எழுத்தர்களின் நலனை கருத்திற்கொண்டு, அவர்களின் நியமனதாரர்கள் / சார்ந்தவர்களுக்கு, தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதியிலிருந்து ரூ.4.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

## 21. நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள்

தற்போது 990 நீதிமன்றங்கள் சொந்த கட்டடங்களிலும், 109 நீதிமன்றங்கள் அரசு கட்டடங்களிலும் மற்றும் 87 நீதிமன்றங்கள் தனியார் வாடகை கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் நீதிமன்றங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் கீழமை நீதிமன்றங்களுக்கு கோரும்போதெல்லாம் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 22. தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு

22.1. சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினருக்கு இலவசமாக சட்டம் சார்ந்த சேவைப் பணிகளை வழங்கவும், பொருளாதார அல்லது ஏனைய இயலாமைகள் காரணமாக எந்த ஒரு குடிமகனுக்கும் நீதி கிடைப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படக் கூடாது என்பதை உறுதி செய்வதற்கும், தகராறுகளுக்குத் தீர்வு காணும் ஒரு மாற்று அமைப்பாக மக்கள் நீதிமன்றங்களை சட்டப்பூர்வமாக ஏற்படுத்துவதற்கும், சமுதாயத்தில் ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய உரிமைகள் குறித்து பயிற்றுவிக்கவும், சமூக நலன் குறித்த பல்வேறு சட்டங்கள் மற்றும் நிருவாக ஆணைகளின்படி அவர்களுக்குண்டான பயன்கள் மற்றும் சலுகைகளைப் பெற வழிவகை செய்யவும் 1987–ம் ஆண்டு சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம் (1994–ஆம் ஆண்டின் சட்டப்படி திருத்தி

அமைக்கப்பட்டது) இயற்றப்பட்டது. அந்தச் சட்டத்தில் மேலே குறிப்பிட்ட பணிகளை செயல்படுத்துவதற்காக மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுக்கள், வட்ட சட்டப்பணிகள் குழுக்கள் மற்றும் உயர்நீதிமன்ற சட்டப்பணிகள் குழு அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், உயர்நீதிமன்ற சட்டப்பணிகள் மற்றும் மாநிலம் முழுவதும் எங்கெல்லாம் நீதிமன்றங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் வட்ட சட்டப்பணிகள் குழுக்களை மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவால் அமைக்கப்பட்டுள்ளன. மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவினை அமைத்து அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டது. தற்போது, 2 உயர்நீதிமன்ற சட்டப் பணிகள் குழுக்கள், 32 மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுக்கள் மற்றும் 150 வட்ட சட்டப் பணிகள் குழுக்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

**சட்ட உதவி பெற தகுதியுடையோர்**

**22.2.** சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம், 1987, பிரிவு 12–ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் நபர்கள் வழக்கு தொடுக்கவும், எதிர்த்து வழக்காடவும் சட்ட உதவி பெறவும் தகுதியுடையவர்களாவர்:–

(i) ஆதிதிராவிடர் (அல்லது) பழங்குடியினர்

(ii) அரசியலமைப்பு சட்டப்பிரிவு 23–ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மனிதர்களை விற்பது, வாங்குவது, வற்புறுத்தி வேலை வாங்குவது ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நபர் (அல்லது) பிச்சை எடுப்பவர்கள்

(iii) பெண் (அல்லது) குழந்தை

(iv) மாற்றுத் திறனாளிகள்

(v) பேரிடர்கள், இன வன்முறை, சாதி வன்கொடுமை, வெள்ளம், பஞ்சம், நில அதிர்ச்சி, தொழிற்சாலை பேரழிவு ஆகியவற்றால் பாதிப்பிற்கு உள்ளானவர்கள்

(vi) தொழிற்சாலை தொழிலாளர்கள்

(vii) சிறைக் காவலில் இருப்போர், பாதுகாப்பு இல்லம், இளம் குற்றவாளிகள் இல்லம், மன நல மருத்துவமனை அல்லது மனநல காப்பகம் இவைகளில் காவலில் உள்ளவர்கள்

(viii) சட்டப் பணிகள் ஆணைக்குழு சட்டம், 1987, பிரிவு 12(எச்)–ல் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்திர வருமானத்திற்கு உட்பட்டவர்கள். இலவச சட்ட உதவி பெறுவோருக்கான ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.3,00,000/– ஆகும்.

**ஆலோசனை மற்றும் சமரச மையம்**

22.3. பிரச்சனைகளை அடிப்படையிலேயே தீர்த்து வைக்கும் ஒரு மாற்று முறை தீர்வு அமைப்பாக வழக்குகளை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லாமலே உடன்பாடு எட்டுவதற்கு உதவும் ஒரு கருவியாக

ஆலோசனை மற்றும் சமரச மையங்கள் இயங்கி வருகின்றன.

**சட்டம் சார்ந்த உதவிகள்**

22.4. சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கு சட்டப்பணிகள் ஆணைக் குழுக்கள் இலவசமாக சட்ட உதவிகள் அளித்து வருகின்றன. மேலும், குற்ற வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சட்ட உதவிகள் பெறுவதற்கும், மோட்டார் வாகன விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்கள் உரிய இழப்பீடு பெறுவதற்கும் உதவுகின்றன.

**மக்கள் நீதிமன்றம்**

22.5. மக்கள் நீதிமன்றங்கள், நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கையோ அல்லது நீதிமன்ற அதிகார வரம்புக்குள் வருகின்ற எந்த பொருள் பற்றியோ அதில் சம்மந்தப்பட்ட தரப்பினர்களுக்கு

இடையே ஒரு தீர்வு எட்டுவதற்கு நடத்தப்பட்டு வருகின்றன. நிரந்தர மக்கள் நீதிமன்றங்கள் சட்டப்பணி ஆணைக்குழு சட்டம், 1987, பிரிவு 22பி–ன்படி, 32 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உச்சநீதிமன்றம் முதல் வட்ட அளவிலான நீதிமன்றம் வரை அனைத்து நீதிமன்றங்களிலும் தேசிய மக்கள் நீதிமன்றங்கள் நடைபெற்று வருகின்றன. இவை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகின்றன.

**மத்திய சிறைச்சாலைகளில் சட்ட உதவி மையம் மற்றும் மக்கள் சிறை நீதிமன்றம்**

22.6. சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், கடலூர், சேலம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலைகளிலும் மற்றும் வேலூரில் உள்ள பெண்கள் தனிச் சிறைச்சாலையிலும் சட்ட உதவி மையம் மற்றும் மக்கள் சிறை நீதிமன்றங்கள் செயல்பட்டு

வருகின்றன. சென்னை புழலிலுள்ள மத்தியச் சிறைச்சாலையில் ஒரு சட்ட உதவி மையம் இயங்கி வருகிறது. சிறைச்சாலை நீதிமன்றம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறுகிறது. சிறைச்சாலை சட்ட உதவி மையங்களில் சிறைவாசிகளிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு அவை சட்ட உதவி மையங்களில் உள்ள உரிய பதிவேடுகளில் பதியப்பட்டு அவற்றின்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

**சட்ட உதவி வழக்குரைஞர் திட்டம்**

22.7. காவலில் உள்ளவர்கள் பிணையில் வெளிவருவதற்கும் மீண்டும் காவலில் வைப்பதற்கான ஆணையை எதிர்ப்பதற்கும், காவலில் உள்ளவர்கள் வழக்கை எதிர்கொள்வதற்கும் மற்றும் பாதகமான உத்தரவுகளை எதிர்த்து மேல் முறையீடு மற்றும் மறு ஆய்வு செய்வதற்கும், தேவையான சட்ட உதவிகளை அளிப்பதற்கும் இத்திட்டம் உதவுகிறது.

மேலும், குற்றவியல் நீதிமன்ற நடுவரின் முன்பாக காவலில் வைப்பதற்கு அழைத்து வரப்படும் நபர்கள் வழக்குரைஞர்கள் வைத்துக்கொள்ள வசதியற்றவர்களாக இருப்பின், அவர்களுக்கு சட்ட உதவி அளிப்பதற்கு, சட்ட உதவி வழக்குரைஞர்கள் உதவி புரிகின்றனர்.

**மாற்றுத் தீர்வு மையங்கள்**

22.8. மாற்று முறை தீர்வு மையங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும், அமைக்கப்பட்டு, சமரச நடவடிக்கைகள், மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் பிற மாற்று முறை தீர்வுகளுக்கு இணைப்பு பாலமாக செயல்படுகின்றன.

**பாதிக்கப்பட்டவருக்கான இழப்பீடு திட்டம் –2013**

22.9. ஒரு குற்றத்தின் விளைவாக காயம் மற்றும் பொருள் இழப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் புனர்வாழ்வு தேவைப்படுவோர் அல்லது

அவரைச் சார்ந்தோருக்கு இழப்பீடு வழங்க குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 (சட்டம் 2 / 1974) பிரிவு 357ஏ இன் படி அரசால் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீட்டுத் திட்டம் 2013 வகுக்கப்பட்டுள்ளது. காவல் துறை தலைமை இயக்குநரால் இத்திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்படுகிறது.

**பாலியல் குற்றங்கள் மற்றும் இதர குற்றங்களால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான தமிழ்நாடு இழப்பீட்டு திட்டம் –2018**

22.10. ஒரு குற்றத்தின் விளைவாக காயம் மற்றும் பொருள் இழப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்ட மற்றும் புனர்வாழ்வு தேவைப்படும் பெண்கள் அல்லது அவரைச் சார்ந்தோருக்கு இழப்பீடு வழங்க தமிழக அரசால் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சென்னையில் உள்ள தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவால் நிதி வழங்கப்படுகிறது.

## தொலைபேசி வழி சட்ட உதவி

22.11. சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் சட்ட உதவி மையக் கட்டடத்தில் சட்ட உதவி மையம் ஒன்று தொலைபேசி வழி சட்ட உதவி அளிக்கும் பொருட்டு இயங்கி வருகின்றது. இம்மையத்திற்கு, சுழற்சி முறையில் காலை மற்றும் மாலை இருவேளையும், அனைத்து வேலை நாட்களிலும், வழக்குரைஞர்கள் அனுப்பி வைக்கப்பட்டு பொதுமக்களின் சட்டம் சார்ந்த பிரச்சனைகளுக்கு தொலைபேசி வாயிலாக தக்க ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்குகின்றனர். சட்ட உதவி கோரும் பொதுமக்கள் 044-25342441 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். வழக்காடும் பொது மக்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக இலவச எண் 1800-4252-441 பயன்பாட்டில் உள்ளது.

## 23. அரசு வழக்காடும் துறை, உயர்நீதிமன்றம், சென்னை

அரசு வழக்காடும் துறை, மாநில தலைமை அரசு வழக்குரைஞரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. இரண்டு கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர்கள் உச்சநீதிமன்றத்தில் மாநில அரசின் சார்பாக வழக்குகளில் வாதாடுவதற்கு நியமிக்கப்பட்டு உள்ளனர்.

## 24. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்

24.1. குற்ற வழக்குத் தொடர்வு இயக்கம் மாநிலத்திலுள்ள தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்டுள்ள குற்ற வழக்குகளை திறம்பட நடத்துதல் மற்றும் இந்நீதிமன்றங்களின் அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர்களின் பணித்திறனை கண்காணித்தல்

போன்றவற்றின் மீது முழுக்கட்டுப்பாடு செலுத்தும் இயக்ககமாக உள்ளது. இவை தவிர, அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர்கள் விழிப்புப்பணி, காவல்துறை, சிறைத்துறை, பொது சுகாதாரம், விவசாயத்துறை, மருந்துக்கட்டுப்பாடு மற்றும் விதைச்சான்று இயக்குநரகம் போன்ற துறைகளில் அயற்பணியில் சட்ட ஆலோசகர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

24.2. உச்சநீதிமன்றம் மற்றும் அனைத்து மாநிலங்களிலுள்ள உயர்நீதிமன்றங்களின் முக்கியமான தீர்ப்புகள் தமிழ்நாடு அரசு குற்ற வழக்கு நடத்துனர் மாத இதழில் வெளியிடப்படுகின்றன. இது அரசு வழக்கு நடத்துனர்களுக்கு குற்றவியல் வழக்குகளை நடத்த பெரும் உதவியாக உள்ளது. தலைமை அலுவலகத்திலும் மண்டல மற்றும் மாவட்ட தலைமை அலுவலகத்திலும் சட்ட நூல்கள் அடங்கிய நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## 25. முடிவுரை

வழக்காடும் பொது மக்களுக்கு, விரைவாக நீதி பெறுதலை உறுதி செய்யும் வண்ணம் நீதிமன்றங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை இந்த அரசு தொடர்ந்து வழங்கும்.

**எஸ். ரகுபதி**
சட்டத்துறை அமைச்சர்

**பிற்சேர்க்கை - 1**

*(பத்தி 2 – ஐக் காண்க)*

**தமிழ்நாடு நீதித்துறையின் படிநிலை அமைப்பு**

**சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்ற கிளை**

| *உரிமையியல் நீதிமன்றங்கள்* | | | *குற்றவியல் நீதிமன்றங்கள்* | |
|---|---|---|---|---|
| **சென்னை மாநகர்** | **வெளியூர்** | | **சென்னை மாநகர்** | **வெளியூர்** |
| மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள்<br><br>சிறுவழக்குகள் நீதிமன்றங்கள் | மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள்<br><br>சார்பு நீதிமன்றங்கள்<br><br>மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்<br><br>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் | | பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள்<br><br>தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்<br><br>குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |

## பிற்சேர்க்கை - 2

*(பத்தி 5 – ஐக் காண்க)*

**சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்**

| வ எண் | நீதிமன்றங்களின் / தீர்ப்பாயங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி | | முதுநிலை உரிமையியல் நீதிபதி | | உரிமையியல் நீதிபதி |
|---|---|---|---|---|---|---|
| | | மாவட்ட நீதிமன்றங்கள் | மத்திய குற்ற புலனாய்வு வழக்கு தனி நீதிமன்றங்கள் | பெருநகர் குற்றவியல் நடுவர் | இதர வகை பிரிவு | |
| 1. | மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | 18 | 6 | -- | 28 | 1 |
| 2. | சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | 1 | -- | -- | 8 | 8 |
| 3. | பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 2 | -- | 1 | 26@ | 8* |
| 4. | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | 4 | -- | -- | -- | -- |
| 5. | தொழில் தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 6. | விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | 1 | -- |
| 7. | அரசுப் போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 8. | இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வரும் தனி நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 9. | தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | 1 | -- | -- | -- | -- |
| 10. | துணை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | -- | -- | -- | -- | 1 |
| 11. | குடும்ப நல நீதிமன்றங்கள் | 8 | -- | -- | -- | -- |
| 12. | மகளிர் நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 13. | தமிழ்நாடு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம் தனிநீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 14. | போதைமருந்துகள் மற்றும் மனமயக்கப்பொருட்கள் தடுப்புச்சட்டம் தனிநீதிமன்றங்கள் | 2 | -- | -- | -- | -- |
| 15. | குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான அமர்வு நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 16. | சென்னை மாநகராட்சி, சென்னை விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 17. | உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை | 1 | -- | -- | -- | -- |
| 18. | துணைச் செயலர், தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு | -- | -- | -- | 1 | -- |
| 19. | செயலாளர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை | -- | -- | -- | 1 | -- |
| 20. | ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றம் | -- | -- | -- | 1 | -- |
| 21. | மோட்டர் வாகன விபத்து இழப்பீடு வழக்குகள் - சிறப்பு நீதிமன்றங்கள் | -- | -- | -- | 2 | -- |
| 22. | நிரந்தர மக்கள் நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 23. | தலைவர், தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 24. | அமர்வு நீதிபதி, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளைவிசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் | 2 | -- | -- | 1 | -- |
| 25. | பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் (POCSO)-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| | மொத்தம் | **50** | **6** | **1** | **69** | **18** |

**மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை - 144**

**( மாவட்ட நீதிபதிகள் -56, முதுநிலை உரிமையியல் நீதிபதிகள் -70, உரிமையியல் நீதிபதிகள்-18)**

**@ 2 நடமாடும் நீதிமன்றங்கள் உட்பட**

*** குற்றவியல் நடுவர் தரத்தில் 5 விரைவு நீதிமன்றங்கள், 2 நிலஅபகரிப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் உட்பட**

# பிற்சேர்க்கை –3

(பத்தி 5 – ஐக் காண்க)

**மாநிலத்தில் செயல்படும் சார்நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்**

| வரிசை எண் | மாவட்டங்கள் | மாவட்ட நீதிபதி | | | | | | | | | | | முதுநிலை உரிமையியல் நீதிபதி | | | | | | | உரிமையியல் நீதிபதி | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மாவட்ட நீதிமன்றங்கள் | குடிமை உரிமை பாதுகாப்புச் சட்ட / எஸ்சி &எஸ்டி (வன்கொடுமைகள் தடுப்பு) சட்ட தனி நீதிமன்றங்கள் | குண்டு வெடிப்பு வழக்கு/ இனக்கலவர வழக்கு நீதிமன்றங்கள் | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றம் இன்றியமையாப் பொருட்கள் சட்டம்/ போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டம் | தனி நீதிமன்றங்கள் மத்திய புலனாய்வுத்துறை வழக்கு / முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் வழக்கு | குடும்ப நல நீதிமன்றங்கள்/விரைவு நீதிமன்றங்கள் | மகளிர் நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றங்கள் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு | மக்கள் நீதிமன்றம் | தனி நீதிமன்றங்கள் POCSO Act | தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு | தனி நீதிமன்றங்கள் நில எடுப்பு வழக்குகள் | ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள் | மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு | மாநில போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | விரைவு நீதிமன்றங்கள்/கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றங்கள் நில அபகரிப்பு வழக்குகள் | நடமாடும் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 1. | அரியலூர் | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | – | 1 | – | 1 | 3 | -- | 2 | -- | 1 | -- | 3 | 5 | -- | -- | -- | 1 |
| 2. | கோயம்புத்தூர் | 5 | -- | 1 | 2 | 1* | 2## | 2 | 1 | – | 1 | 1 | 1 | 7 | 1 | -- | 1 | 1 | 2 | 10 | 13 | 3# | 1 | 1 | 2 |
| 3. | கடலூர் | 4 | 1 | -- | 1 | -- | -- | 1 | 1 | – | 1 | 1 | 1 | 9 | 1 | 1 | – | 1 | -- | 10 | 10 | 1# | 1 | – | 4 |
| 4. | தருமபுரி | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | – | 1 | 4 | 1 | -- | -- | 1 | -- | 4 | 5 | 2# | 1 | – | 1 |
| 5. | திண்டுக்கல் | 2 | 1 | -- | -- | -- | -- | 2### | 1 | – | 1 | – | 1 | 5 | 1 | -- | -- | 1 | -- | 6 | 6 | 2# | – | 1 | 4 |
| 6. | ஈரோடு | 5 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | – | 1 | 7 | 1 | -- | -- | 1 | 1 | 8 | 9 | 3# | 1 | 1 | 1 |
| 7. | காஞ்சிபுரம் | 3 | -- | -- | 1 | -- | -- | 2### | 1 | – | 1 | 1 | 1 | 7 | – | -- | -- | 1 | -- | 8 | 11 | 3# | – | 1 | 3 |
| 8. | கன்னியாகுமரி | 3 | -- | -- | -- | -- | -- | 2### | 1 | – | 1 | 1 | 1 | 7 | – | -- | – | 1 | -- | 9 | 8 | 3# | – | – | 1 |
| 9. | கரூர் | 1 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | – | 1 | – | 1 | 3 | – | -- | -- | 1 | -- | 3 | 4 | 2# | 1 | – | 2 |
| 10. | கிருஷ்ணகிரி | 3 | -- | -- | 1 | -- | -- | 1 | 1 | 1 | 1 | – | 1 | 6 | 1 | -- | -- | 1 | -- | 3 | 4 | 2# | 1 | – | 3 |
| 11. | மதுரை | 6 | 1*# | 1 ** | 1 | 3* | 2## | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 8 | 1 | -- | 1 | 1 | 2 | 7 | 11 | 3# | 1 | 1 | 2 |
| 12. | நாகப்பட்டினம் | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | – | 1 | 1 | 1 | 3 | – | -- | -- | 1 | -- | 4 | 5 | 3# | – | – | 2 |

## பிற்சேர்க்கை-3 ன் தொடர்ச்சி

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13. | நாமக்கல் | 2 | 1 | –– | –– | –– | –– | 1 | 1 | – | 1 | – | 1 | 5 | – | –– | –– | 1 | –– | 6 | 7 | 2# | 1 | 1 | – |
| 14. | நீலகிரி | 1 | –– | –– | 1 | –– | –– | 1 | 1 | – | 1 | – | –– | 3 | – | –– | –– | 1 | –– | 3 | 3 | 2# | 1 | – | 2 |
| 15. | பெரம்பலூர் | 1 | 1 | –– | –– | –– | –– | 1 | 1 | – | 1 | – | 1 | 1 | – | –– | –– | 1 | –– | 2 | 2 | 1# | 1 | – | 2 |
| 16. | புதுக்கோட்டை | 2 | 1 | –– | –– | 1* | –– | –– | 1 | – | 1 | – | 1 | 3 | – | –– | –– | 1 | –– | 3 | 4 | 1# | – | – | 4 |
| 17. | இராமநாதபுரம் | 2 | 1 | –– | –– | –– | –– | 2### | 1 | – | 1 | – | 1 | 3 | – | –– | –– | 1 | –– | 3 | 4 | 1# | 1 | – | 4 |
| 18. | சேலம் | 4 | –– | –– | 1 | 1* | –– | 2### | 1 | 1 | 1 | 1 | 1 | 7 | 2 | –– | 1 | 1 | 1 | 10 | 13 | 3# | 1 | 1 | 2 |
| 19. | சிவகங்கை | 2 | 1 | –– | –– | –– | –– | 1 | 1 | – | 1 | 1 | 1 | 3 | – | –– | 1 | 1 | –– | 4 | 3 | 2# | – | – | 6 |
| 20. | தஞ்சாவூர் | 4 | 1*# | –– | 1 | 1* | –– | 2### | 1 | 1 | 1 | 1 | 2 | 5 | 1 | –– | –– | 1 | –– | 5 | 7 | 3# | 1 | – | 3 |
| 21. | தேனி | 2 | 1 | –– | –– | –– | –– | 2### | 1 | – | 1 | – | 1 | 3 | – | –– | –– | 1 | –– | 5 | 5 | 3# | 1 | – | – |
| 22. | தூத்துக்குடி | 3 | 1 | –– | –– | –– | –– | 1 | 1 | – | 1 | 1 | 1 | 3 | – | –– | –– | 1 | 1 | 6 | 9 | 2 | 1 | – | 1 |
| 23. | திருச்சி | 3 | 1*# | –– | 1 | –– | –– | 1 | 1 | 1 | 1 | – | 1 | 8 | 1 | –– | 1 | 1 | 1 | 10 | 10 | 1# | 1 | 1 | 1 |
| 24. | திருநெல்வேலி | 4 | 1*# | –– | 1 | –– | –– | 2### | 1 | – | 1 | 1 | 1 | 8 | 1 | –– | 1 | 1 | 1 | 13 | 12 | 1# | 1 | 1 | 4 |
| 25. | திருப்பூர் | 4 | – | – | – | – | – | 1 | 1 | 1 | 1 | – | 1 | 7 | – | – | – | 1 | 1 | 7 | 10 | 2# | 1 | – | 2 |
| 26. | திருவள்ளூர் | 5 | –– | –– | –– | –– | –– | 1 | 1 | 1 | 1 | – | 1 | 5 | 1 | 1 | –– | 1 | –– | 8 | 9 | 3 | 1 | – | 4 |
| 27. | திருவண்ணாமலை | 2 | 1 | –– | –– | –– | –– | 2### | 1 | – | 1 | 1 | 1 | 5 | 1 | –– | –– | 1 | –– | 8 | 7 | 2# | – | – | 2 |
| 28. | திருவாரூர் | 1 | – | –– | –– | –– | –– | 1 | 1 | – | 1 | – | 1 | 2 | – | –– | –– | 1 | –– | 3 | 4 | 2# | – | – | 3 |
| 29. | வேலூர் | 4 | 1 | –– | 2 | –– | –– | 2### | 1 | – | 1 | 1 | 1 | 7 | 1*** | 2 | –– | 1 | 1 | 10 | 15 | 2# | – | – | 4 |
| 30. | விழுப்புரம் | 4 | 1 | –– | –– | 1 | –– | 2### | 1 | 1 | 1 | 1 | 1 | 9 | 3 | –– | 1 | 1 | –– | 15 | 11 | 2# | 1 | 1 | 2 |
| 31. | விருதுநகர் | 3 | 1 | –– | –– | –– | –– | 1 | 1 | – | 1 | 1 | 1 | 6 | – | –– | –– | 1 | –– | 5 | 8 | 2# | 1 | – | 2 |
| | **மொத்தம்** | 91 | 17 | 2 | 13 | 8 | 4 | 42 | 31 | 10 | 31 | 15 | 32 | 162 | 18 | 6 | 7 | 31 | 11 | 201 | 234 | 64 | 21 | 10 | 75 |
| | | **மாவட்ட நீதிபதி -264** | | | | | | | | | | | **முதுநிலை உரிமையியல் நீதிபதி- 267** | | | | | | | **உரிமையியல் நீதிபதி - 605** | | | | | |
| | | | | **மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை - 1136** | | | | | | | | | | | | | | | | | | | | | |

* இன்றியமையா பொருட்கள் சட்டத்தின் கீழ் இயங்கும் ஒரு தனி நீதிமன்றம் உட்பட

\# ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் உட்பட (குற்றவியல் நடுவர் தரத்தில்)

** இனக் கலவர வழக்கு தொடர்பான நீதிமன்றம்

\## முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான ஒரு தனி நீதிமன்றம் உட்பட

*** மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம்

\### மாவட்ட நீதிபதி தரத்தில் ஒரு விரைவு நீதிமன்றம் உட்பட

*# குடியுரிமை பாதுகாப்பு சட்ட தனி நீதிமன்றம்

**பிற்சேர்க்கை-4**

*(பத்தி 8.24 -ஐக் காண்க.)*

## நில அபகரிப்பு வழக்குகளுக்கான தனி நீதிமன்றங்களின் விவரம்

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | இடம் | நீதிமன்றங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சென்னை | சென்னை மாநகரம் | 2 |
| 2. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 1 |
| 3. | கடலூர் | கடலூர் | 1 |
| 4. | தருமபுரி | தருமபுரி | 1 |
| 5. | ஈரோடு | ஈரோடு | 1 |
| 6. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், செங்கல்பட்டு | 2 |
| 7. | கரூர் | கரூர் | 1 |
| 8. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | 1 |
| 9. | மதுரை | மதுரை மாநகரம் | 1 |
| 10. | நாமக்கல் | நாமக்கல் | 1 |
| 11. | பெரம்பலூர் | பெரம்பலூர் | 1 |
| 12. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 1 |
| 13. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 1 |
| 14. | சேலம் | சேலம் மாநகரம் | 1 |
| 15. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 1 |
| 16. | நீலகிரி | உதகமண்டலம் | 1 |
| 17. | தேனி | தேனி | 1 |
| 18. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மாநகரம் | 1 |
| 19. | தூத்துக்குடி | தூத்துக்குடி | 1 |
| 20. | திருநெல்வேலி | திருநெல்வேலி மாநகரம் | 1 |
| 21. | திருப்பூர் | திருப்பூர் | 1 |
| 22. | திருவள்ளூர் | திருவள்ளூர் | 1 |
| 23. | விழுப்புரம் | விழுப்புரம் | 1 |
| 24. | விருதுநகர் | விருதுநகர் | 1 |
| | | **மொத்தம்** | **26** |

## பிற்சேர்க்கை-5

*(பத்தி 10-ஐக் காண்க)*

### சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயத்தில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த அட்டவணை

| வ. எண் | ஆண்டு | *உரிமையியல் வழக்குகள்* | | | | *குற்றவியல் வழக்குகள்* | | | | நிலுவையில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | |
| 1. | 2016 # | 175664 | 63598 | 54922 | **184309** | 20282 | 33145 | 32984 | **20454** | 204763 |
| 2. | 2017 # | 184309 | 53860 | 53066 | **188262** | 20454 | 34776 | 34108 | **21122** | 209384 |
| 3. | 2018 | 188262 | 55540 | 60699 | **183103** | 21122 | 36154 | 36366 | **20910** | 204013 |
| 4. | 2019 | 183103 | 59714 | 72648 | **170169** | 20910 | 40470 | 41061 | **20319** | 190488 |
| 5. | 2020 | 170169 | 32204 | 38806 | **163567** | 20319 | 25613 | 26537 | **19395** | 182962 |

**#** சரிபார்த்ததற்கு பின்

**பிற்சேர்க்கை - 6**

*(பத்தி 10- ஐக் காண்க)*

**சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த அட்டவணை**

| வ. எண் | ஆண்டு | *உரிமையியல் வழக்குகள்* | | | | *குற்றவியல் வழக்குகள்* | | | | நிலுவையில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | |
| 1. | 2016 | 74469 | 34124 | 30317 | **78276** | 14013 | 27346 | 26783 | **14576** | 92852 |
| 2. | 2017 | 78276 | 33596 | 33835 | **78037** | 14576 | 21554 | 21075 | **15055** | 93092 |
| 3. | 2018 | 78037 | 34622 | 34465 | **78194** | 15055 | 26293 | 30551 | **10797** | 88991 |
| 4. | 2019 | 78194 | 35972 | 39347 | **74819** | 10797 | 22706 | 26088 | **7415** | 82234 |
| 5. | 2020 | 74819 | 25860 | 22058 | **78621** | 7415 | 18604 | 18185 | **7834** | 86455 |

## பிற்சேர்க்கை -7

*(பத்தி 10– ஐக் காண்க)*

### மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த அட்டவணை

| வ. எண் | ஆண்டு | *உரிமையியல் வழக்குகள்* | | | | *குற்றவியல் வழக்குகள்* | | | | நிலுவையில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | ஆரம்ப இருப்பு | புது வழக்குகள் | தீர்க்கப் பட்டவை | நிலுவை | |
| 1. | 2016 # | 651697 | 305192 | 333912 | **620808** | 431096 | 704008 | 683199 | **450558** | 1071366 |
| 2. | 2017 # | 621039 | 327844 | 338994 | **609947** | 451033 | 681227 | 676328 | **455931** | 1065878 |
| 3. | 2018 # | 609947 | 340021 | 332950 | **616179** | 455931 | 585706 | 573234 | **468107** | 1084286 |
| 4. | 2019 # | 616179 | 356201 | 323026 | **648084** | 468107 | 547719 | 526214 | **489600** | 1137684 |
| 5. | 2020 # | 647805 | 219318 | 148649 | **717710** | 489527 | 338029 | 281118 | **546048** | 1263758 |

**#** சரிபார்த்ததற்கு பின்

*******